| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.எஸ்.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்<br>இணை இயக்குநர்(கல்வி)<br>பாண்டிச்சேரி / காரைக்கால் |

**ந.க.எண். 019895 /பி3/2021 நாள் :06.10.2021**

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத்தேர்வு (2021–2022) – புதிய தேர்வுமையங்கள் அமைத்தல் – கருத்துரு அனுப்புதல் தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

பார்வை : அரசாணை (1டி) எண்.602, பள்ளிக் கல்வித்துறை (ஜிஇ1)த் துறை, நாள் : 11.10.2017.

*****

2021–2022 கல்வியாண்டு இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத்தேர்விற்கு புதிய தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பான கருத்துருக்களை கீழ்க்குறிப்பிட்ட அறிவுரைகளை பின்பற்றி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**2020–2021 ஆம் கல்வியாண்டில் இடைநிலைப் பொதுத்தேர்விற்கு புதிய தேர்வு மையங்களை பரிந்துரைச் செய்து அனுப்பப்பட்ட பள்ளிகளை தவிர்த்து கருத்துரு அனுப்பப்படவேண்டும்.**

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து, நடப்பு கல்வியாண்டு 2021–2022 இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத்தேர்வுக்கான புதிய தேர்வு மையங்கள் கோரும் கருத்துருக்களை அனுப்பி வைக்கக் கோரி பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். அதன்பின் பள்ளிகளிலிருந்து பெறப்படும் கருத்துருவினைப் பரிசீலனை செய்து, அப்பள்ளிகளை நேரில் பார்வையிட்டு பிற்சேர்க்கை "அ" மற்றும் "ஆ" ஆகியவற்றைப் பூர்த்தி செய்து உரிய முதன்மைக் கல்வி அலுவலரின் ஒப்புதல் பெற்று கருத்துருவினை இவ்வலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மேலும், மார்ச் 2020 ம் ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்காக ஓராண்டுக்கு மட்டும் தேர்வு மையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட பள்ளிகள் தொடர்ந்து தேர்வு மையமாக செயல்பட வேண்டுமெனில் (சென்ற ஆண்டு வழங்கப்பட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை / நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின்) மீண்டும் கருத்துரு அனுப்பி இயக்குநரின் ஆணை பெறவேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

**தேர்வு மையங்கள் அமைப்பது இன்றியமையாதது என்று கருதப்படும் பள்ளிகளுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட பள்ளியை நேரில் ஆய்வு செய்த பின், அவசியம் தேர்வு மையமாக அமைத்தே ஆக வேண்டும் என்பதற்கான காரணத்தை விளக்கி திட்டவட்டமான தங்களது குறிப்புரையுடன் கருத்துரு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட புதிய தேர்வு மையங்கள் பற்றிய செய்தியினை மந்தணமாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.**

புதிய தேர்வு மையங்கள் அமைக்க பரிந்துரைக்கப்படும் பள்ளிகள், இத்துடன் இணைத்தனுப்பப்படும் அரசாணையில் உள்ள விதிகளின்படி, தேர்வு மையங்களாக செயல்பட தகுதியுள்ளதை உறுதி செய்த பின் பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யப்படும் பள்ளிகள் பற்றிய அனைத்து விவரங்களையும் இத்துடன் அனுப்பப்படும் பிற்சேர்க்கை "அ" மற்றும் "ஆ" வில் சரியான முறையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அரசாணையில் உள்ள விதிகளின்படி இல்லாத பள்ளிகளை தேர்வு மையம் வேண்டி பரிந்துரை செய்து அனுப்பப்படும் அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மேலிடத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என அறிவிக்கலாகிறது. **10 கி.மீ. தூரத்திற்கு மேல் பயணம் செய்து தேர்வெழுத தேர்வு மையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் பயிலும் அரசு பள்ளிகளில் புதிய தேர்வு மையங்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.**

..2

பரிந்துரை செய்யப்படும் புதிய தேர்வு மையங்கள் ஏதும் இல்லை எனில் **"இன்மை அறிக்கை"** அனுப்புதல் வேண்டும்.

தற்பொழுது தேர்வு மையங்களாக செயல்படும் மையங்களில், இரத்து செய்யப்பட வேண்டிய தேர்வு மையங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை உரிய காரணங்களுடன் பட்டியலிட்டு படிவம் I-ல் (format I) பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். அங்கீகாரம் இல்லாமல் நீதிமன்ற ஆணையின் மூலம் தொடர்ந்து இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) தேர்வெழுதி வரும் பள்ளிகளின் பட்டியலை படிவம் II–ல் (format II) பூர்த்தி செய்தும் அனுப்புதல் வேண்டும். **2021–2022 இடைநிலை பொதுத்தேர்வுக்கு ஏற்கனவே தேர்வு மையமாக செயல்பட்டு வரும் பள்ளிகள் / புதியதாக தேர்வு மையம் கோரும் பள்ளிகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் தேர்வு மையமாக செயல்பட அனுமதிக்கப்படமாட்டாது.**

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட புதிய தேர்வு மையம் கோரும் கருத்துருக்களையும், ( பிற்சேர்க்கை "அ" , "ஆ" ) மேற்குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களையும் (Format I & II), 30.10.2021-க்குள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாண்டு 2021– 2022 இடைநிலை பொதுத் தேர்வுக்கான முகப்புத்தாட்கள் அச்சிட வேண்டிய சூழலில் மேலும் காலம் தாழ்த்தாது குறிப்பிட்டுள்ள தேதியிலேயே கண்டிப்பாக புதிய தேர்வு மையம் கோரும் கருத்துருக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் அறிவுரைகளை தவறாது பின்பற்றி தேவைப்படும் விவரங்கள் அனைத்தையும் 30 .10.2021 –க்குள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு :** அரசாணை, பிற்சேர்க்கை "அ" , "ஆ"
மற்றும் படிவங்கள் I & II

**நகல்** 1.அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(துங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் பரிந்துரைக்கும் புதிய தேர்வு மையங்களை தாங்கள் ஆய்வு செய்து பரிந்துரைக்கத் தகுதியுடைய தேர்வு மையங்களை மட்டும் இத்துறைக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது)
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்கள்.

<u>இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு)</u>
<u>பொதுத்தேர்வு 2021–2022</u> கல்வியாண்டு
<u>பிற்சேர்க்கை – "அ"</u>
<u>புதிய தேர்வு மையம் – கோரும் விண்ணப்பம்</u>

| | | |
|---|---|---|
| 1. | புதிய தேர்வு மையம் கோரும்<br>பள்ளியின் எண்&பெயர் | |
| 2. | அங்கீகாரம் நடப்பு ஆண்டிற்கு உள்ளதா:<br>(ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 3. | கட்டிட உறுதி மற்றும் உரிமச் சான்று நடப்பு கல்வி ஆண்டுக்கு (April 2022 வரை) உள்ளதா<br>(சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | |
| 4. | வருவாய் மாவட்டம் | |
| 5. | அ) கல்வி மாவட்டம் | |
| | ஆ) நகர்புற பள்ளி / கிராமப்புற பள்ளி | |
| | இ) அரசுப்பள்ளி / தனியார் பள்ளி /<br>சுயநிதி பள்ளி | |
| 6. | பள்ளியின் முகவரி (அஞ்சல் குறியீட்டு<br>எண்ணுடன் | |
| 7. | பள்ளியின் தொலைபேசி எண். | |
| 8. | பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு<br>மாணவர்களின் எண்ணிக்கை<br>ஆண்<br>பெண்<br>மொத்தம் | |
| 9. | இடவசதி (மாணவர்கள் எண்ணிக்கையில்,20<br>மாணவர்களுக்கு ஒரு வகுப்பறை வீதம்) | |
| 10. | இருக்கை வசதி (மாணவர்கள்<br>எண்ணிக்கையில்) | |
| 11. | பள்ளியிலுள்ள மொத்த வகுப்பறைகள் | |

| | | |
|---|---|---|
| 12. | மார்ச் 2020–ல் தேர்வெழுத இணைக்கப்பட்ட தேர்வு மையம் / இணைப்புப் பள்ளியின் எண் மற்றும் பெயர் **(பழைய தேர்வுமைய தலைமையாசிரியரின் தடையின்மைச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)** | மாணவர் எண்ணிக்கை |
| | 1.<br>2.<br>3. | |
| 13. | தங்களது பள்ளிக்கும் மார்ச் 2020–ல் தேர்வெழுத ஒதுக்கீடு செய்யப்பட்ட மையத்திற்கும் இடைபட்ட தூரம் | |
| 14. | 2021–2022 கல்வியாண்டில் தங்களது பள்ளியுடன் இணைக்க வேண்டிய இணைப்புப் பள்ளிகள் விவரம் (இணைப்புப் பள்ளி தலைமை ஆசிரியர் இசைவு கடிதம் இணைக்கப்பட வேண்டும்) | |

| **இணைப்பு பள்ளியின் எண், பெயர் மற்றும் மாணவர் எண்ணிக்கை** | **ஏற்கனவே தேர்வெழுதிய மையத்தின் பெயர் மற்றும் தேர்வு மைய எண்** | **பழைய தேர்வு மையத்தில் மார்ச் 2020–ல் (பத்தாம் வகுப்பு) இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர் மற்றும் தேர்வெழுதிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** | **பழைய மையத்தின் தூரம்** | **தற்போது இணைக்கப்படும் மையத்திற்கும் பள்ளிக்குமிடையே உள்ள தூரம்** |
|---|---|---|---|---|
| | | | | |

| | | |
|---|---|---|
| 15. | புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டால், ஏற்கனவே தேர்வெழுதிய பழைய தேர்வு மையத்தில், 2021–2022 கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு தேர்வினை எழுதும் மாணவர்களின் விவரம் (பள்ளி வாரியாக) | |
| **வ. எண்** | **தேர்வு மையம் / இணைப்பு பள்ளியின் பெயர்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
| 1.<br>2.<br>3. | | |

| | | |
|---|---|---|
| 16. | தலைமையாசிரியரின் குறிப்புரை | |
| 17. | புதிய தேர்வு மையம் அமைக்க மாவட்டக் கல்வி அலுவலர் பரிந்துரைப்பதற்கான காரணம் மற்றும் குறிப்புரை | |

**மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்**

**முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் கையொப்பம்**

**Format I**

**SSLC 2021–2022**

**Existing centers to be closed**

| S.No. | Centre No. & Name of the Centre to be closed | | Reason for closing |
|---|---|---|---|
| | Centre No. | Name | |
| | | | |

**District Educational Officer**

## <u>பிற்சேர்க்கை – "ஆ"</u>

வருவாய் மாவட்டத்தின் பெயர் : கல்வி மாவட்ட எண் பெயர்:

| வ. எண் | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியின் எண், பெயர், பள்ளி விவரம் (அரசு /தனியார்/ சுயநிதி) **மற்றும்** பள்ளி அமைவிடம் (கிராமம்/ நகரம்/ மலைப்பகுதி) | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியில் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை | | | **இட வசதி / இருக்கை வசதி** | **புதிய தேர்வு மையத்துடன் இணைக்கப்படும் பள்ளிகளின் எண், பெயர் , மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மையத்திற்கும், இணைப்புப் பள்ளி/ பள்ளிகளுக்கும் இடையேயான தூரம்** | | | **புதிய தேர்வு மையம் கோரும் பள்ளி** மார்ச் **2020–ல்** தேர்வு எழுத இணைக்கப்பட்ட தேர்வு மையத்தின் பெயர் மற்றும் அங்கு தேர்வெழுதிய மொத்த மாணவர்கள் எண்ணிக்கை | | **பழைய தேர்வு மையத்திற்கும் புதிய தேர்வு மையத்திற்கும் இடைப்பட்ட தூரம்** | | **புதிய தேர்வு மையம்** கோருவதற்கான **காரணம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | | பள்ளியின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | தூரம் (கி.மீ.) | தேர்வு மைய எண், பெயர்/ பள்ளி எண்/ இணைப்புப் பள்ளிகளின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | பழைய தேர்வு மைய தூரம் | புதிய தேர்வு மைய தூரம் | |
| | | | | | | | | | | | | | |

**முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் கையொப்பம்**

**மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்**

FORMAT – II

## SSLC 2021-2022

**List of schools which are not recognized and awaiting renewal of recognition but always sending students for examinations by virtue of court orders obtained at the last moment or based on orders of Director of Matriculation Schools, Chennai-6 or Director of School Education, Chennai-6**

| S.NO | NAME OF THE SCHOOL | | NAME OF THE CENTRE IN WHICH STUDENTS WROTE THE EXAMINATION IN THE PREVIOUS YEARS | | DETAILS OF COURT ORDER OBTAINED IN LAST YEARS (ENCLOSE A COPY) | DETAILS OF RECOMMENDATION ORDERS OF DMS / DSE WITH NO. & DATE IN PREVIOUS YEARS |
|---|---|---|---|---|---|---|
| | SCHOOL NO. | NAME | SCHOOL NO. | NAME | | |
| | | | | | | |

**District Educational Officer**